සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**12 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2017**

| | | |
|---|---|---|
| ශෛවනෙරි I, II | | පැය තුනයි |
| **சைவநெறி I, II** | | ***மூன்று மணித்தியாலம்*** |
| Saivaneri I, II | | *Three hours* |

## சைவநெறி I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

**1.** அருவம், உருவம், அருவுருவம் ஆகிய திருமேனிகளில் நின்று ஆன்மாக்களுக்கு அருள் செய்பவர்
(1) சிவபெருமான் (2) விநாயகர்
(3) முருகன் (4) உமாதேவியார்

**2.** வேதாந்தம் என்று சிறப்பித்துக் கூறப்படுபவை
(1) சங்கிதைகள் (2) ஆரண்யகங்கள்
(3) உபநிடதங்கள் (4) பிராமணங்கள்

**3.** சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என்ற நான்கு பிரிவுகளையுடைய நூல்கள்,
(1) வேதங்கள் எனப்படும். (2) இதிகாசங்கள் எனப்படும்.
(3) புராணங்கள் எனப்படும். (4) சிவாகமங்கள் எனப்படும்.

**4.** சைவத் திருமுறைகளுள் பத்தாவதாக அமைந்திருப்பது
(1) திருவிசைப்பா (2) திருப்பல்லாண்டு
(3) திருமந்திரம் (4) பெரியபுராணம்

**5.** நடராசர் தனது இடது திருக்கரத்தில் ஏந்தியுள்ள தீச்சுடர் சுட்டிநிற்கும் தத்துவப் பொருள்
(1) படைத்தல் (2) காத்தல்
(3) மறைத்தல் (4) அழித்தல்

**6.** உயிர் உடலில் இருக்கும்போது ஆற்றப்படும் சடங்குகள்
(1) அபரக்கிரியைகள் எனப்படும். (2) பூர்வக்கிரியைகள் எனப்படும்.
(3) நித்தியக்கிரியைகள் எனப்படும். (4) காமியக்கிரியைகள் எனப்படும்.

**7.** "உண்மைப்பொருள் ஒன்றே, அறிவாளர் அதனைப் பலபெயர்களால் வழங்குவர்" என்று குறிப்பிடுவது
(1) இருக்குவேதம் (2) யசுர்வேதம்
(3) சாமவேதம் (4) அதர்வவேதம்

**8.** திருமணத்தில் புரிந்துணர்வு, விட்டுக் கொடுத்தல் என்பவற்றைச் சுட்டி நிகழும் செயற்பாடு
(1) பாணிக்கிரகணம் எனப்படும். (2) கணையாழி (மோதிரம்) எடுத்தல் எனப்படும்.
(3) இரட்சா பந்தனம் எனப்படும். (4) பூதாக்கலம் எனப்படும்.

**9.** சனி பகவானின் வாகனம்
(1) கருடன் (2) கிளி
(3) காகம் (4) மயில்

[பக். 2 ஐப் பார்க்க

**10.** வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் வருடாந்தப் பெருவிழாவாக நடைபெறுவது
(1) வைகாசிப் பொங்கல் (2) வசந்த நவராத்திரி
(3) தைப்பூசம் (4) பங்குனி உத்தரம்

**11.** உலகப்பற்று, உடற்பற்று, உடைப்பற்று என்பவற்றை நீக்க வழிபட வேண்டிய மூர்த்தம் எது ?
(1) நடேச மூர்த்தம் (2) வைரவ மூர்த்தம்
(3) கங்காதர மூர்த்தம் (4) சண்டேஸ்வர மூர்த்தம்

**12.** அருணகிரிநாதர் கிளி வடிவில் இருந்து பாடிய நூல்களை மாத்திரம் கொண்ட தொகுதி
(1) கந்தரனுபூதி, திருப்புகழ் (2) கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம்
(3) மயில் விருத்தம், சேவல் விருத்தம் (4) திருவகுப்பு, வேல்விருத்தம்

**13.** நட்சத்திரங்களின் பெயர்களை மாத்திரம் கொண்ட தொகுதி
(1) பவம், பாலவம், கௌலவம் (2) பிரதமை, துதியை, திருதியை
(3) அச்சுவினி, பரணி, கார்த்திகை (4) பஞ்சமி, நாகவம், சுவாதி

**14.** சிவபெருமானின் அருவுருவத் திருவடிவம்
(1) நடராசர் (2) சோமாஸ்கந்தர்
(3) தென்முகக்கடவுள் (4) இலிங்கம்

**15.** விநாயக சஷ்டி விரதம் தொடங்கும் தினம்
(1) ஆவணி மாதத் தேய்பிறைப் பிரதமை (2) ஐப்பசி மாத வளர்பிறைப் பிரதமை
(3) கார்த்திகை மாதத் தேய்பிறைப் பிரதமை (4) மார்கழி மாத வளர்பிறை சஷ்டி

**16.** பழுகாமம் திரௌபதி அம்மன் ஆலயச் சடங்கினை ஆற்றுப்படுத்துவோர்
(1) பூசாரி எனப்படுவர். (2) நம்பியார் எனப்படுவர்.
(3) கப்புறாளை எனப்படுவர். (4) குருக்கள் எனப்படுவர்.

**17.** மட்டக்களப்பிலே சிறுவர்களும் இளைஞர்களும் நிகழ்த்திவரும் கூத்து
(1) காத்தவராயன் கூத்து (2) காமன் கூத்து
(3) வசந்தன் கூத்து (4) சிந்துநடை விலாசம்

**18.** "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலாதார்" எனக் குறிப்பிட்டவர்
(1) திருமூலர் (2) கபிலர்
(3) ஔவையார் (4) திருவள்ளுவர்

**19.** "வாதவூரர் விளம்பிட அம்பலவன் எழுதியது" எனச் சிறப்பித்துக் கூறப்படும் நூல்
(1) திருவாசகம் (2) கந்தபுராணம்
(3) மகாபாரதம் (4) திருவிரட்டைமணிமாலை

**20.** ஐம்பூதங்கள் வாயிலாக வரும் துன்பங்கள்
(1) ஆதி தெய்விகம் எனப்படும். (2) ஆதி பௌதிகம் எனப்படும்.
(3) ஆதியான்மிகம் எனப்படும். (4) ஆகாமியம் எனப்படும்.

**21.** புதிதாக உருவாக்கப்படும் கோயில்களுக்குச் செய்யப்படும் கும்பாபிஷேகம்
(1) நூதன கும்பாபிஷேகம் (2) ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகம்
(3) ஆவர்த்தன கும்பாபிஷேகம் (4) அந்தரித கும்பாபிஷேகம்

**22.** மந்திரம், மாயம், மருந்து போன்றவற்றுக்கு முதன்மை அளிக்கும் வேதம்
(1) இருக்கு வேதம் (2) யசுர் வேதம்
(3) சாம வேதம் (4) அதர்வ வேதம்

**23.** அகச்சந்தான குரவர்களின் பெயர்கள் மாத்திரம் அடங்கியுள்ள தொகுதி
(1) சனகர், சனாதனர், சனற்குமாரர், மெய்கண்டதேவர்
(2) திருநந்திதேவர், மெய்கண்டதேவர், சனகர், சனாதனர்
(3) திருநந்திதேவர், சனற்குமாரமுனிவர், சத்தியஞானதர்சினிகள், பரஞ்சோதிமுனிவர்
(4) மெய்கண்டதேவர், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார்

[பக். 3 ஐப் பார்க்க

**24.** 'பிள்ளையார் கதை' எனும் நூலை இயற்றியவர்
(1) அரங்கநாத ஐயர்
(2) சுவாமிநாத பண்டிதர்
(3) சின்னத்தம்பிப் புலவர்
(4) வரதபண்டிதர்

**25.** குரு வழிபாட்டின் மூலம் வீடுபேறு அடைந்தோரை மாத்திரம் கொண்ட தொகுதி
(1) மங்கயற்கரசியார், குலச்சிறையார், அப்பூதியடிகள்
(2) பூசலார், கண்ணப்பர், சாக்கிய நாயனார்
(3) திருநீலகண்டர், இயற்பகையார், சிறுத்தொண்டர்
(4) திருமூலர், சேரமான் பெருமாள், இளையான்குடிமாறனார்

**26.** ஞான நெறி மூலம் அடையும் முத்தி
(1) சாமீபம்
(2) சாயுச்சியம்
(3) சாரூபம்
(4) சாலோகம்

**27.** "ஆரம் கண்டிகை ஆடையுங் கந்தையே" என்று பாடியவர்
(1) நக்கீரர்
(2) திருமூலர்
(3) சேக்கிழார்
(4) அப்பர்

**28.** 'மகாளயம்' என்ற சொல் குறிக்கும் பொருள்
(1) பெரிய ஒடுக்கம்
(2) சங்கமம்
(3) தோற்றம்
(4) அந்தியேட்டி

**29.** சகலகலாவல்லிமாலை என்னும் பனுவலை இயற்றியவர்
(1) அபிராமிப்பட்டர்
(2) கம்பர்
(3) நக்கீரர்
(4) குமரகுருபரர்

**30.** திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசைத் தினம்
(1) தைப்பூசம்
(2) மாசிமகம்
(3) பங்குனி உத்தரம்
(4) சித்திரைச்சதயம்

**31.** திருஞானசம்பந்தர் "மந்திரமாவது நீறு..." என்னும் திருநீற்றுப் பதிகத்தைப் பாடிய போது நிகழ்ந்த அற்புதம்
(1) பாண்டிய மன்னனின் வெப்பு நோய் நீங்கியமை
(2) கல் தெப்பமாக மிதந்தமை
(3) முதலை உண்ட சிறுவன் மீண்டமை
(4) பாம்பு தீண்டிய வணிகன் உயிர்பெற்றமை

**32.** ஐந்தாம் குரவராக மதிக்கப்படும் சிறப்புக்குரியவர்
(1) வள்ளலார்
(2) குமரகுருபரர்
(3) ஆறுமுகநாவலர்
(4) விபுலானந்தர்

**33.** சாம்பவ தீட்சை என அழைக்கப்படுவது
(1) விரதங்கள்
(2) பண்டிகைகள்
(3) திருவிழாக்கள்
(4) குருபூசைகள்

**34.** தட்சணகைலாசபுராணம் எழுந்த காலம்
(1) கண்டி இராச்சிய காலம்
(2) தம்பதெனிய இராச்சிய காலம்
(3) வன்னிச் சிற்றரசர் காலம்
(4) யாழ்ப்பாண இராச்சிய காலம்

**35.** சைவசித்தாந்தத்தின் முதல் நூலாகக் கொள்ளப்படுவது
(1) திருவருட்பயன்
(2) சிவஞானபோதம்
(3) சிவஞானசித்தியார்
(4) சிவப்பிரகாசம்

**36.** திருமுறைகண்ட புராணத்தை அருளியவர்
(1) உமாபதி சிவாச்சாரியார்
(2) நம்பியாண்டார் நம்பி
(3) சேக்கிழார்
(4) திருஞானசம்பந்தர்

**37.** இருளிலும் கொடிய மலம் என்று கூறப்படுவது
(1) மாயாமலம்
(2) ஆணவமலம்
(3) கன்மமலம்
(4) ஆகாமியமலம்

[பக். 4 ஐப் பார்க்க

51507

● பின்வரும் அட்டவணையில் **A** இலிருந்து **I** வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு **38** தொடக்கம் **40** வரையான வினாக்களுக்கான விடைகளைத் தெரிவுசெய்க.

| சைவ நாயன்மார் | சமூகப்பணி | பதிகம் |
|---|---|---|
| A - திருஞானசம்பந்தர் | D - முதலையுண்ட சிறுவனை மீட்டமை | G - "ஒன்று கொலாமவர் சிந்தை..." |
| B - திருநாவுக்கரசர் | E - 'முயலகன்' என்ற நோயை நீக்கியமை | H - "மீளா அடிமை..." |
| C - சுந்தரமூர்த்தி நாயனார் | F - இறந்தவரை உயிர்ப்பித்தமை | I - "இடரினும் தளரினும்..." |

**38.** திருத்தொண்டத் தொகையைப் பாடிய சைவசமய குரவருடன் தொடர்புடைய தொகுதி
(1) ADG (2) BFI (3) CDH (4) CEH

**39.** "செய்யனே திருவாலவாய் மேவிய ஐயனே..." என்ற பதிகத்தைப் பாடியவரோடு தொடர்புடைய தொகுதி
(1) ADH (2) AFI (3) BDG (4) CFH

**40.** சைவசமய வளர்ச்சிக்காக எண்பத்தொரு வயது வரையும் வாழ்ந்து பணியாற்றிய சமய குரவரோடு தொடர்புடைய தொகுதி
(1) AEH (2) BEI (3) BFG (4) CDH

* *

சகல உரிமைகளும் / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

நவ நிர்தேசய/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

12 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

ශෛවනෙරි I, II
சைவநெறி I, II
Saivaneri I, II

## சைவநெறி II

* **முதலாம்** வினாவும் **இரண்டாம்** வினாவும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் இரண்டாம் வினாவின் விடைக்கு **16** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **8** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) இசைப் பாடல்களால் அமைந்துள்ள வேதம் எது ?

(ii) ஆகமங்களின் குறிக்கோள் யாது ?

(iii) திருநாவுக்கரசர் கைலாயத் திருக்கோலத்தைத் தரிசித்த இடம் யாது ?

(iv) தியாகராசன் என்னும் பெயர் சுட்டி நிற்கும் கடவுளின் பெயர் யாது ?

(v) அரிமர்த்தன பாண்டியனது பொற்காசுகளைச் சமூக நன்நோக்கில் நின்று செலவிட்ட நாயனார் யார் ?

(vi) "நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன்"
என்பதில் வரும் 'சங்கரன்' என்ற சொல்லின் பொருள் யாது ?

(vii) பாடசாலைகளில் நடத்தப்படும் சமய விழாக்கள் **இரண்டினை** எழுதுக.

(viii) பஞ்சாங்கத்தில் இடம்பெறும் திதிகளின் பெயர்கள் **இரண்டினைத்** தருக.

(ix) உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய சித்தாந்த சாத்திர நூல்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

(x) சைவ சமயம் வலியுறுத்தும் முக்கிய விழுமியங்கள் **மூன்று** தருக.

**2.** (i) மேல்வரும் பாடல்களுள் **இரண்டினை** அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

(ii) அவற்றின் பொழிப்புரையை எழுதுக.

(அ) "உற்றுமை சேர்வது..."
(ஆ) "பால் நினைந் தூட்டும்..."
(இ) "யாவருக்கு மாமிறை வற்கொரு..."
(ஈ) "கேடும் ஆக்கமும் கெட்ட..."
(உ) "தூக்கும் பனுவல் துறை..."

**3.** "இலங்கையில் சைவ சமயத்தை மேம்படுத்திய தமிழ்ப் பெரியார்களுள் சுவாமி விபுலானந்தர் குறிப்பிடத்தக்கவர்."

(i) இசைக்கலை வளர்ச்சிக்காக விபுலானந்தர் எழுதிய நூலின் பெயர் என்ன ?

(ii) விபுலானந்தர் எழுதிய சைவ சமயம் சார்ந்த நூல்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

(iii) விபுலானந்தரின் சமூகப் பணிகள் **மூன்றினைச்** சுருக்கமாக விளக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

4. "இலங்கையில் சைவ சமயப் பாரம்பரியங்களைப் பேணிப்பாதுகாக்கும் நோக்கில் சைவ சமய நிறுவனங்கள் தோற்றம் பெற்றன."

(i) சைவவித்தியாவிருத்திச்சங்கம் எந்த ஆண்டில், எவ்விடத்தில் ஆரம்பிக்கப்பட்டது ?

(ii) சைவவித்தியாவிருத்திச்சங்கத்தின் நோக்கங்கள் **ஐந்தினைக்** குறிப்பிடுக.

(iii) சைவவித்தியாவிருத்திச்சங்கத்தின் சமூகப் பணிகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

5. "மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும் திருக்கோவையாரும் தனிச்சிறப்புடையவை."

(i) திருவாசகம், திருக்கோவையார் ஆகிய ஒவ்வொன்றும் எத்தனை பனுவல்களைக் கொண்டுள்ளன ?

(ii) நாட்டுப்புறப் பெண்களாற் பாடப்படும் பாடல்கள் அமைந்த திருவாசகப் பதிகங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(iii) மாணிக்கவாசகரின் சைவ சமயப் பணிகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

6. "குன்றெ றிந்தவன் அமரர்பால் பேரருள் கொடுநோக்கி
நன்றி யில்லவன் சிறையிடைப் பலபகல் னணுகுற்றீர்
துன்று பேரிடர் மூழ்கினீர் ஈங்கினித் துயரின்றி
என்றும் வாழ்குதிர் துறக்கமேல் வெறுக்கையில் இருந்தென்றான்." - கந்தபுராணம்

(i) தமிழில் கந்தபுராணத்தை இயற்றியவர் யார் ? அது எத்தனை காண்டங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது ?

(ii) முருகனின் பேரருள் பற்றி இப்பாடலில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?

(iii) கந்தபுராணத்தின் மீட்சிப் படலத்திற் கூறப்பட்டிருக்கும் செய்தியினைச் சுருக்கமாக விளக்குக.

7. மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) திருமூலர்

(ii) சங்கம வழிபாடு

(iii) கண்ணகியம்மன் வழிபாடு

(iv) குங்கிலியக்கலைய நாயனார்

* * *